# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.66/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 6 | நாள் | : | 16.09.2025 |
| பெயர் | : | மாரித்துரை | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 16th day of September 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது நெற்கட்டும்செவலில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். எங்கள் ஊரில் காளியம்மன் கோவில் உள்ளமுடையார் கோவில் உள்ளது. அதில் முதல் மரியாதை வேண்டுமென்று பாண்டியராஜா அவரது மனைவி கோமதி முத்துராணி பிரச்சனை செய்து வந்தார்கள். அவருக்கு ஆதரவாக முத்தையா தேவர் மகன் வெள்ளத்துரை என்பவரும் பேசி வந்தார். எங்கள் ஊரில் காளியம்மன்கோவிலுக்கு பூக்குழி திருவிழா நடைபெறும். முதல் மரியாதை பிரச்சனை சம்பந்தமாக மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு போடப்பட்டிருந்தது. அந்த வழக்கில் யாருக்கும் முதல் மரியாதை கிடையாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவ்வாறு 02.05.2016 அன்று உத்தரவு

பிறப்பிக்கப்பட்டபின்னர் 03.05.2016 அன்று நாள்கால் நடும் நிகழ்ச்சி நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்து அறநிலையத் துறை அலுவலர்கள் அதற்கு வந்திருந்தார்கள். நாங்கள் நாள் கால் விழாவிற்காக 03.05.2016 அன்று காலை காளியம்மன் கோவிலில் கூடியிருந்தோம். சுமார் 7 மணி முதல் 9 மணி வரை அங்கு இருந்தோம். அறநிலையத் துறை அலுவலர்கள் முன்னிலையில் நாள்கால் நடப்பட்ட பின்னர் அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். நாங்கள் முடித்துவிட்டு புறப்படும் முன்பாக சுமார் 30 நபர்கள் நாங்கள் சென்று கொண்டிருந்தவர்களை எதிர்த்து ரைஸ்மில் பக்கமிருந்து வந்தார்கள் கையில் அரிவாள் கம்புடன் வந்தார்கள். அவர்கள் எங்களை அரிவாள் கம்புடன் தாக்கினார்கள். நாங்கள் தாக்க முற்பட்டதும் தப்பியோடினோம். அதில் எனக்கு வலது தொடையில் வெள்ளையா தேவர் மகன் உள்ளமுடையார் கல்லால் எறிந்ததில் காயம் ஏற்பட்டது. பாண்டியராஜா, வேல்ச்சாமி, அருணாச்சலபாண்டியன், உள்ளமுடையார், முத்துப்பாண்டி, வெள்ளத்துரை ஆகியோர்களுக்கும் காயம் ஏற்பட்டது. முத்தையா தேவர் மகன் வெள்ளத்துரை அருணாச்சல தேவர் மகன் தங்கதுரை என்பவரை கம்பியால் பின் தலையில் அடித்தார். அவரை அவரது மகன் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார் நாங்கள் அங்கிருந்து ஓடிவிட்டோம். 108 ஆம்புலன்ஸ் மூலம் நானும், பாண்டியராஜா, உள்ளமுடையார், முத்துப்பாண்டி, வெள்ளத்துரை புளியங்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். அங்கு போலீசார் வந்தார்கள் அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.09.16 18:10:45 +0530